மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 172, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

172—

கழிவுநீர்ச் சுத்திகரிப்பு

***35657—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியின் கழிவுநீரைச் சுத்திகரிப்பு செய்து கழிவறைகளுக்கும், பிற சுகாதாரப் பணிகளுக்கும் பயன்படுத்தும் வகையில் அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரில் மனிதக் கழிவுகள் கலக்காத கழிவுநீரும், மனிதக் கழிவுகள் கலந்த கழிவுநீரும் ஒரே கழிவுநீர்க் குழாய்மூலம் வெளியேற்றும் அமைப்பு உள்ளதால், மனிதக் கழிவுநீர் கலக்காத கழிவுநீரை தனியாகச் சேகரித்து, தனிக் குழாய்மூலம் அதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் சென்று, சுத்திகரித்து, மீண்டும் தனிக் குழாய் அமைப்பு மூலமாக குடிநீரல்லாத பிற பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்துவது மிகவும் கடினம். இருப்பினும், தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் அக்டோபர் 11, 2002-ன்படி ஒவ்வொரு அடுக்கு மாடி குடியிருப்புகளிலும், பொதுக் கட்டடங்களிலும் இரு வெவ்வேறு குழாய்கள் அமைக்கப்பட்டு, ஒன்று குளியலறை மற்றும் கை கழுவும் இடத்திலிருந்து வெளியேறும் நீரைத் தனிக் குழாய்மூலம் எடுத்து நீரைச் சேகரிக்கவும், மற்றொன்று கழிவறை நீரைச் சேகரிக்கவும் உபயோகிக்கப்பட வேண்டும்; கழிவறையிலிருந்து வரும் நீர் மட்டும்தான் தெருக் கழிவுநீர்க் குழாயுடன் இணைக்கப்பட வேண்டும்; ஒவ்வொரு கட்டடமும் குளியலறை மற்றும் கை கழுவும் உபயோகத்திலிருந்து வரும் நீரைக் கொண்டு செல்ல ஒரு தனிக் குழாய் அமையப் பெற்றிருக்க வேண்டும்; இவ்வாறு சேகரிக்கப்பட்ட நீரை இரசாயனக் கலப்பில்லாத அல்லது இயந்திர மறு சுழற்சிமூலம் போதுமான அளவு சுத்திகரிக்கப்பட்டு, கீழ்நிலைத் தொட்டியில்

2005 மார்ச் 16]

சேகரிக்கப்பட்டு, அங்கிருந்து இதற்கெனத் தனியாக அமைக்கப்பட்டுள்ள உயர்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அல்லது தனி அறை கொண்ட உயர்நிலைத் தொட்டிக்கு விசைக் குழாய்மூலம் அனுப்பப்பட்டு கழிவறைக்கு மட்டும் உபயோகப்படுத்தப்பட வேண்டும்; இந்த உபயோகம் தவிர மீதமுள்ள நீர், தகுந்த குழாய்களின்மூலம் கட்டடத்தில் உள்ள மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு நிலத்தடி நீரை உயர்த்துவதற்கு உபயோகப்படுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முற்பகல் 10–55

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வீராணம் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி சென்னை மக்களின் தாகத்தைத் தீர்த்த மாண்புமிகு அம்மாவினுடைய அரசுக்கு நன்றி தெரிவித்து, குளியல் நீர் மற்றும் துணிகளைச் சுத்தப்படுத்துவதற்கு பயன்படும் நீரைச் சுத்தம் செய்து மீண்டும் மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு அரசு சிறப்புத் திட்டத்தை நிறைவேற்ற பரிசீலிக்குமா என்பதையும், எதிர்காலத்தில் சென்னை நகரில் கட்டடங்களுக்கு அனுமதி அளிக்கும்பொழுதே இந்தக் கழிவுகளைச் சேமிக்க குழாய்கள் அமைக்க ஒரு நிபந்தனை விதிக்கப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் மனிதக் கழிவுகள் கலக்காத கழிவுநீரும், மனிதக் கழிவுகள் கலந்த கழிவுநீரும் ஒரே கழிவுநீர்க் குழாய்மூலம் வெளியேற்றும் அமைப்பு உள்ளதால், மனிதக் கழிவுநீர் கலக்காத கழிவுநீரைத் தனியாக சேகரித்து, தனிக் குழாய்கள்மூலம் அதைச் சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் சென்று சுத்திகரித்து மீண்டும் தனிக் குழாய் அமைப்புமூலமாக குடிநீர் இல்லாத பிற பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்துவது மிகவும் கடினம். ஆகவே, இதற்கு வாய்ப்புகள் குறைவு. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்திற்கேற்றாற்போல் அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் இப்போதே பல இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரைக் கொண்டு தெரு ஓரப் பூங்காக்கள்

பராமரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது உண்மையா என்று தங்கள்மூலமாக அமைச்சரிடமிருந்து விடை பெற நான் கருதுகின்றேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் கொடுங்கையூரில் இரு முறை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை சென்னை பெட்ரோலிய சுத்திகரிப்பு நிலையத்திற்கும், சென்னை உரத் தொழிற்சாலைக்கும் மற்றும் சுத்திகரிக்கப்படாத கழிவுநீரை மின் உற்பத்தி நிலையத்திற்கும் மறு உபயோகத்திற்கு விநியோகிக்கப்படுகிறது. அப்படி விநியோகிக்கின்ற நேரத்தில் மாநகராட்சிமூலமாக சிறிது சிறிதாக அமைக்கப்பட்ட பூங்காவிற்கும் இப்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 173, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

173—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***43182—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மேல்மாம்பட்டு, மந்தைப்பேட்டையில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, மேல்மாம்பட்டு ஊராட்சியிலுள்ள மேல்மாம்பட்டு குடியிருப்பின் ஒரு பகுதி மந்தைப்பேட்டை ஆகும். மந்தைப்பேட்டை பகுதி மேடான இடத்தில் அமைந்துள்ளபோதிலும், அங்கு தனி ஆழ்துளைக் கிணறு அமைத்து, மின்னிறைப்பான்மூலம் நேரிடையாக போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS